
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


| | | |
|---|---|---|
| மலர் 2 | பெப்ருவரி 1989 | இதழ் 2 |


பரிசுத்த



வேதாகமம்


வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

''கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்'' ரோமர் 16:16

# நற்செய்திப் பேருரைகள்

| செய்தியாளர்கள்: | நாட்கள்: | நேரம்: |
|---|---|---|
| 1. M. A. தானியேல், மூப்பர் – கிறிஸ்துவின் சபை, மலேசியா. | 20–2–89 | மாலை 6-30 மணி |
| 2. E. Z. செல்வநாயகம் – ஆசிரியர்: திருமறை ஆசான், ஊழியர்: கிறிஸ்துவின் சபை, ஈரோடு-638 002. | பெப்ருவரி 22-24 1989 | மாலை 6-30 மணி |

**இடம்: கிறிஸ்துவின்சபை கூடும் இடம்,**
*1, ஃகிட்டே கவுடர் வீதி, வடக்குப்பேட்டை சத்தி 638401.*

அனுமதி இலவசம்! அனைவரும் வாரீர்!!

விவரங்கட்கு: D. சாமுவேல்ராஜ், ஊழியர், கிறிஸ்துவின் சபை, சத்தியமங்கலம்-638401 பெரியார் மாவட்டம்.

பி. கு. :– பரிசுத்த ஆவியானவரைப் பற்றி உரை நிகழ்த்தப்படும்.

## இதழின் உள்ளே


| | |
|---|---|
| வாழ்க்கையின் துயரங்களோடு கர்த்தரை சேவித்தல் | 1 |
| கிறிஸ்து நம்மைப் போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டிருந்தார் | 6 |
| நிழலும் பொருளும் | 9 |
| கேள்வி-பதில் | 15 |
| அப்போஸ்தலன் பவுலின் நிருபங்கள்--ஓர் கண்ணோட்டம். | 18 |
| இயேசுகிறிஸ்து ஸ்தாபித்த சபை | 25 |
| ஈகைப் பெருங்குணம் | 27 |

# THIRUMARAI AASAAN

Editor :
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India**

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 2. February 1989 Issue 2


ஆசிரியவுரை

# வாழ்க்கையின் துயரங்களோடு ★ கர்த்தரைச் சேவித்தல்

நம்முடைய வாழ்க்கையில் இருக்கிற குறைவுகள் ஏற்படுகிற துன்பங்கள் அநேக சமயங்களில் நம்மைச் சோர்வடையச் செய்து வாழ்க்கையைக் கசப்பாக்கி விடுகிறது, நமக்குத்தான் ஊரில் இல்லாத துன்பங்களும், பிரச்னைகளும் இருக்கின்றன. மற்றவர்கள் எல்லாம் எவ்வளவோ மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்கள் தேவ பக்திக்குரிய காரியங்களை இகழ்ந்தும், அசட்டை செய்தும் தங்கள் இச்சைகளுக்குக்கேற்றபடி வாழ்கிறார்கள். சொத்து மேல் சொத்து சேருகிறது, எடுத்த காரியங்களை வெற்றியோடு முடிக்கிறார்கள், சர்வமும் நிறைந்து காணப்படுகிறது என்றெல்லாம் எண்ணி, நாம் கடவுளைப் பற்றிக் கொண்டிருப்பதால் என்ன நன்மையைக் கண்டடைந்தோம் என்று புலம்புகிறோம், தயவுசெய்து சங்கீதம் 73-ம் அதிகாரத்தை ஜெபத்துடன் வாசித்துச் சிந்தியுங்கள்,

வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களும். துன்பங்கள் யாவுமே தீமையானவைகள் என்று ஒட்டு மொத்தமாக நினைத்து விடக்கூடாது. பூச்சி, புழுக்கள் எல்லாம் பயிர்களை அழித்து நாசம் செய்து விடுகின்றன என்று பொதுவாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் சில வகைப் புழுக்கள் பயிர்களுக்கு மிகவும் உபயோகமான பணிகளைச் செய்கிறதாக விவசாய நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அது போல சில துன்பங்களும், கஷ்டங்களும் வாழ்க்கையில் நாம் வெற்றி அடைவதற்கு இன்றியமையாதவைகள் என்று அறிந்து ஆறுதல் அடைய வேண்டும்.

நம்முடைய வாழ்க்கையை செம்மைப்படுத்துவதற்கு தேவன் சில வேளைகளில் நம்மைச் சிட்சிக்க வேண்டியிருக்கலாம். ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணர் தன் நோயாளிகளில் ஒருவரைப் பார்த்து நான் உம்மைக் காயப்படுத்த வேண்டி வரலாம். ஆனால் உம்மை வேதனைப் படுத்த மாட்டேன் என்றாராம், ஆம் நம்மை பரிசுத்தப் படுத்துவதற்கு தேவன் நம்மைக் காயப் படுத்த நேரிடலாம். ஆனால் நிச்சயமாக வேதனைப்படுத்தமாட்டார், இதை எபிரேய ஆசிரியர் விளக்கும் போது, 'அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத் தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாக அடங்கி நடக்க வேண்டுமல்லவா?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்ச காலம் சிட்சித்தார்கள், இவரோ நம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோசனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார்,

எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும், ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியான சமாதான பலனைத் தரும்' என்கிறார் எபி 12:9-11 சிட்சையை அதாவது கடிந்து கொள்ளுதலை எல்லோருமே விரும்புவதில்லை, ஆனால் அது கர்த்தருடைய பரிசுத்தத்துக்கு நம்மை பங்காளியாக்குகிறதே.

நமக்கு நேரிடும் சோதனைகளைக் குறித்து பேதுரு கூறும் போது, "அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும், மகிமையும் உண்டாகக் காணப்படும்," என்கிறார் 1 பேதுரு. 1:7

நாம் கிறிஸ்துவுக்காகப் படுகிற துன்பங்கள் ஒரு போர் வீரன் யுத்தத்தில் பெறும் விழுப்புண்களுக்குச் சமமானது, அப்போஸ்தலன் பவுல் கலாத்தியருக்கு எழுதும் போது " இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தமுண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன். ' என்று கூறுகிறார், கலா 6:17. தான் கிறிஸ்துவுக்காக பாடுபட்டதினால் ஏற்பட்ட தழும்புகளை மனதில் கொண்டு இப்படி எழுதுகிறார். பழைய ஏற்பாட்டில் யோனாவின் எட்டு வார்த்தைப் பிரசங்கம் நினிவே பட்டணத்து மக்களையும் அரசனையும் உலுக்கியதே, அதற்கு காரணம் என்ன வென்று நினைக்கிறீர்கள்? யோனா திமிங்கலத்தால் விழுங்கப்பட்ட போது அதன் ஜீரண அமிலத்தால் அவன் கூழாகாமல் தப்பின விந்தை அவர்கள் காதுகளுக்கு எட்டியிருக்கலாம். அல்லது அவன் மூன்று நாட்களுக்குப் பிறகு கடற் கரையில் திமிலங்கத்தால்

வாந்தி பண்ணப் பட்டதை அப் பட்டணத்தாரில் எவராவது ஒருவர் பார்த்து விட்டுப் போய் அதை ராஜாவிடம் அறிவித்திருக்கலாம். நமக்குச் சரியாய் தெரியவில்லை. ஆனால் ஒன்று நிச்சயம் அவனுடைய பிரசங்கத்தின் வலிமை அவனுடைய பேச்சு அல்ல; அவனுடைய வாழ்க்கையில் நடந்த இந்த அற்புத சம்பவமும், அதனால் அவன் அடைந்த துன்பங்களும் அதன் விளைவாக அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமும் தான் அந்த மக்களை மனம் திரும்ப வைத்தது என்று துணிந்து கூறலாம். துன்பத்தைப் பற்றி நமக்குப் பட்டறிவு இல்லாமல் மற்றவர்களைத் தேற்றுவதும் மாற்றுவதும் எப்படி? ஆகவே நமக்கு ஏற்படும் துன்பங்களையும் பாடுகளையும் கண்டு துவண்டு போகக் கூடாது.

சில பேர் குறிப்பாக பெண்கள் தாங்கள் அழகாக இல்லையே! என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர். புற அழகை விட குணமே சிறந்தது. அழகுள்ளவர்களெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று எண்ணி விடக் கூடாது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு பேரும், புகழும் பணமும் படைத்த ஒரு சினிமா நடிகை தற்கொலை செய்து கொண்டதாக செய்தித் தாள்களில் வாசித்தேன். அவளுடைய அழகும், பேரும் புகழும், பணமும் அவளுக்கு வாழ்க்கையில் நிம்மதியைத் தரவில்லை என்பதுதானே அவள் அகால மரணம் கூறுகிற சோகக் கதை, ஆகவே புற அழகை விரும்பி, அதில் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டு அக அழகைப் புறக்கணிக்கலாகாது என்று அப்போஸ்தலன் பேதுரு அறிவுரை கூறுகிறார் "மயிரைப் பின்னி பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது." என்கிறார். 1 பேது 3:2-4. நீதி மொழிகளிலும் "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது; அழகும் வீண். கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் என்று அழகின் மாயையையும், புத்தியில்லாமல் வெறும் அழகு மட்டும் இருக்கிற பெண்களை ஒப்பிட்டு கூறும்போது "பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம்' என்று இடித்துரைக்கிறது. நீதி 11:22

நமக்கு அடுக்கடுக்காய் உபத்திரவங்கள் வரும்போது யோபின் மனைவியின் மனநிலை ஏற்பட்டு விடுகிறது. (யோபு 2:9) ஆனால் அதை முயன்று வென்று யோபுவின் மனநிலைக்கு வரப் பிரயாசப்பட வேண்டும் (யோபு 2;10) பல நூற்றாண்டுகளாகியும் யோபின் சகிப்புத்தன்மையும் பொறுமையும் பலராலும் பாராட்டப்படுகின்றன. (யாக் 5:11) உபத்திரவம் வளர்த்து விடும் சில நற்பண்புகளைப் பற்றி அப்போஸ்தலன் பவுல் கூறுவதைக் கேளுங்கள். உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும் (மனத்தின்மை) பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம் என்கிறார் ரோமர் 5:3-4

மனிதனுடைய இயலாமையே கர்த்தர் கிரியை செய்வதற்கு உரிய பக்குவமான பதம் என்று நாம் அறிய வேண்டும். இயேசு அப்போஸ்தலனாகிய பவுலிடம் கூறியதைக் கவனியுங்கள். "என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும் என்கிறார் 2 கொரி 12:9 அதனால் பவுல் ஆறுதல் அடைந்து "அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன், ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன் 2 கொரி 12:10. தேவன் பலவீனமுள்ளவரோடு சேர்ந்து பணியாற்ற விரும்புகிறார், உங்களுடைய பலவீன நிலையே தேவன் பெரிய காரியங்களைச் செய்வதற்கு உங்களை பயன் படுத்துவதற்கு ஏற்ற பக்குவமான நிலையாக இருக்கலாம்,

சிலருக்குத் தாங்கள் ஐசுவரியவான்களாக இல்லையே என்ற மனக்குறை உண்டு, சகோதரர்களே. ஐசுவரியம் வஞ்சனையுள்ளது, பல நற்பண்புகளை அடகு வைத்துத்தான் ஒருவன் செல்வந்தனாக முடியும் ஆகவே செல்வம் சேர்க்கும் ஆசையே கூடாது. அமெரிக்காவில் ஈவர்க்குயூகர் என்றொரு மிகப் பெரிய பணக்காரன் வாழ்ந்தானாம். வங்கிகளை ஏமாற்றியும், வேறு பல மோசடி வேலைகளிலும் ஈடுபட்டும் கோடிக்கணக்கில் பணம் சேர்த்தானாம். நாள் ஒன்றுக்கு பல மில்லியன் டாலர்கள் வருமானம் வந்ததாம். அவன் காலத்தில் உலகில் எந்த ஒரு பகுதியிலும் அவனை விட அதிக வருமானம் பெறக் கூடிய நபர் வேறு எவரும் இல்லை என்று ஊரே பேசிக் கொண்டது. ஆனால் அவனோ பல இரவுகளை தூக்கமில்லாமல் கழித்து இறுதியில் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனான். என்னே பரிதாபம்! பிரசங்கி இதைக் குறித்து எவ்வளவு தெளிவாய் சொல்லி யிருக்கிறார் என்று பாருங்கள். தேவன் தமது பார்வைக்கு நல்லவனாய் இருப்பவனுக்கு ஞானத்தை யும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார். பாவஞ் செய்கிறவனுக் கோ, தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்து விட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார். " பிர 2:26, இதையெல்லாம் மனதில் கொண்டு தான் பவுல் அடியார் கூட "போதுமென்ற மனதோடு கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்றும், பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளால் தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிவுறுத்தி எச்சரிக்கை செய்கிறார். 1 தீமோ 6: 6, 10,

இறுதியாக நீங்கள் உண்மை மனதோடு ஆண்டவருடைய பணியில் ஈடுபடும் பொழுது மாயம்பண்ணி பொருளாசையுடையவர் களாய் மனிதரைப் பிரியப்படுத்தும் நோக்கத்தோடு செயல்படுகிற கள்ள சகோதரர்களிடமிருந்து பலவிதமான எதிர்ப்புகள் வரக்கூடும். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியபட்டுக் கலங்க வேண்டியதில்லை, இது

இன்றைக்குப் புதிதாக முளைத்த பிரச்சனை அல்ல. காலமெல்லாம் தொடர்ந்து நடைபெறுகிற சாத்தானின் திருவிளையாடல்கள் தான் மாறாக இவைகளைச் சந்தித்துப் பொறுமையோடு இவைகளை மேற்கொள்ள நாம் முயற்சிக்கும் போது நீடிய சாந்தமும் பொறுமையும் நமக்கு ஏற்படுகிறது, கர்த்தரின் சகோதரனாகிய யாக்கோபு இதைப்பற்றிச் சொல்லும்போது "என் சகோதரரே! நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் பொழுது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சை ஆனது பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவில்லாதவர்களாயிராமல், பூரணராயும். நிறைவுள்ளவர்களாகவும் இருக்கும்படி. பொறுமையானது பூரண கிரியை செய்யக் கடவது என்று கூறுகிறார்." யாக் 1:2-4 சிலவேளைகளில் நாம் பரம இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிப்பதற்கு உரிய சில தகுதிகளை அடைவதற்கு சோதனைகள் உதவியாக இருக்கின்றன என்கிறார். பேதுரு கூறுவதைக கேளுங்கள், "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்ச காலம் பாடனுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி நிலை நிறுத்துவாராக" என்கிறார், 1 பேது 5–10

வாழ்க்கையில் நமக்கு நேரிடுகிற கஷ்டங்களும் துன்பங்களும் நமக்கு நன்மையே செய்கின்றன. ஒவ்வொரு குறையும் நம்மைக் கடவுள் பக்கமாக இழுத்துச் செல்லுகிறது, கிறிஸ்துவினிமித்தம் நமக்குப் பலவிதமான நிந்தைகள் ஏன் மரணமே சம்பவிப்பதாயிருந்ததாலும் நாம் நீடிய பொறுமையோடு அவற்றைச் சகித்துக் கொள்வது கர்த்தருக்குப் பிரியமான பண்பு என்று கிறிஸ்தவ நெறி நமக்குப் போதிக்கிறது.

ஆகவே நாம் செய்ய வேண்டியது, நம்மைச் சுற்றியுள்ள மக்கள் கூட்டத்தைப் பார்த்து ஆறுதல் அடையப் பழகிக் கொள்ள வேண்டும். பலர் பல்வேறு நிலைகளிலிருந்து தேவனுடைய பிள்ளைகளாகும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவரவர் நிலையில் உண்மையுள்ளவர்களாக மன அமைதலோடு கர்த்தருடைய பாதையில் பொறுமையோடே ஓட வேண்டும். கொரிந்து திருச்சபைக்குப் பவுல் அப்போஸ்தலன் வரைந்த முதல் நிருபத்தின் 7-ம் அதிகாரம் 17 முதல் 24 வசனங்களை வாசித்து அதன் கருத்தைச் சிந்தித்துத் தெளிவு பெறுவோமாக!

E. Z. செல்வநாயகம்.

---

**மாசில்லாத சுத்தமான பக்தி எது?**

திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்தில் அவர்களை விசாரிக்கிறதும் உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது,

# கிறிஸ்து நம்மைப் போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டிருந்தார்.

எபிரேய நிருப ஆசிரியர் "வானங்கள் வழியாய் பரலோகத்துக்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியால் நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு இருக்கக் கடவோம்,

நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டு பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார்.

ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத் தண்டையில் சேரக் கடவோம்" என்று எழுதுகிறார். எபி 4;14-16.

மேற்சொன்ன வசனப்பகுதியில் அநேக ஆழமான உண்மைகள் அடங்கியிருக்கின்றன, ஆனால் இப்போது இயேசு நம்மைப் போலவே எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டிருந்தார்; ஆனாலும் பாவம் செய்ய வில்லை என்பதை மட்டும் குறிப்பாகப் பார்ப்போம் இதைப் புரிந்து கொள்வதற்கு முடியாமல் சிலர் சிரமப்படுகிறார்கள். இயேசு தங்களைப் போல் எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டிருந்தாரானால் அவர் கூட பாவம் செய்திருப்பார் என்பது அவர்களுடைய வாதம். மேலும் தற்காலத்தில் காணப்படும் பல்வேறு நூதனமான பிரச்சனைகள் அன்றைக்கு கிடையா; அப்படியிருக்க தற்காலத்தில் நிலவுகின்ற பாவங்களுக்குப் பரிகாரம் சொல்லுகின்ற அளவுக்கு அவருக்கு எப்படி இயலும்? என்று கேட்கின்றனர்.

கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் வாழ்ந்த காலத்தில் இந்நாட்களில் நாம் சந்திக்கிற பல்வேறு பிரச்சனைகள் இல்லை என்பது மெய்யே அதாவது நாளுக்கு நாள் மனிதன் பாவம் செய்வதற்கு பல வழிகளைக் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கின்றான் உதாரணமாக புகை பிடித்தல் சினிமா, தொலைக்காட்சிகள், போதை மருந்துப்பழக்கம், மனித இனத்தை நொடிப் பொழுதில் அழிக்க வல்ல ஆயுதங்கள் எல்லாம் அந்த நாட்களில் கிடையா அல்லது வெகு குறைவாக இருந்தன. என்பது சரிதான். அதனாலேயே இயேசு கிறிஸ்துவுக்கு இந்த காரியங்கள் எல்லாம் தெரிய நியாயமில்லை என்று தீர்மானித்துவிடக் கூடாது. இப்பொழுது இயேசு இந்த உலகத்தில் இருந்திருந்தாரானால் இவைகளில் ஏதேனும் ஒன்றினால் பிடிபட்டிருப்பார் என்று நினைப்பதும் தவறு.

இயேசு நம்மைப் போல சோதிக்கப்பட்டிருந்தார் என்று சொல்லும் போது அந்நாட்களிலும் பின்னர் வெகுவாகப் பெருகி விட்ட ஒவ்வொரு பாவத்திலும் சோதிக்கப்பட்டார் என்று பொருள் இல்லை. நம்மைப்போல் பலமுனைகளிலும் சோதிக்கப்பட்டார்; ஆயினும் பாவம் செய்யவில்லை. நாம் கூட இந்த உலகத்தில் இருக்கிற ஒவ்வொரு பாவத்திலும் சோதிக்கப்படுவதில்லை, ஆனால் ரகம் பிரிக்கப்பட்டிருக்கிற ஏதாவது ஒரு பாவத்தால் சோதிக்கப்பட்டு விழுந்து போகிறோம். அப்போஸ்தலன் யோவான் கூறியப்படி பாவங்கள் மூன்று இனங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன 1. மாமிசத்தின் இச்சை 2. கண்களின் இச்சை 3. ஜீவனத்தின் பெருமை (யோவான் 2:16) ஒரு மனிதன் எந்தக்காலத்தில் வாழுகிறவனாயிருந்தாலும் சரி அவன் செய்கிற பாவங்கள் இந்த மூன்றுவகைப் பாவத்துக்குள் ஒன்றில் அடங்கும். அன்றைக்கு வாழ்ந்த மனிதன் ஒருவேளை சோமரச பானம் அருந்தியிருக்கலாம் இன்று நவீனப் படுத்தப்பட்ட முறையில் புட்டிகளில் அழகிய வண்ணப் படங்களுடன் விற்கப்படுகிற ஜின். ரம், விஸ்கி வகைகளை அருந்தலாம். ஆனால் இரண்டுமே மனிதனுக்குப் போதை கொடுக்கக் கூடியதே. எனவே கிறிஸ்துவின் காலத்தில் அவருக்கு ஏற்பட்ட சோதனைகள் இம்மூன்று வகைகளையும் சார்ந்தவைகள் என்பதை மத் 4:3-11 வசனங்களை வாசித்தால்தெரியும். ஆகவே நமக்கு வரும் சோதனைகளும் இம்மூன்று ரக பாவங்களில் ஒன்றாகத்தான் இருக்க முடியும் என்பதை அவர் நன்கு அறிவார், நம்முடைய பிரச்சனைகளையும், சோதனைகளையும் அவர் அறிந்திருக்கிறபடியால் நம்மை அனுதாபத்துடன் பார்த்து இரக்கத்தோடு உதவிசெய்யும் ஆவலுடன் இருக்கிறார்.

சாத்தான் கெட்டிக்காரன். எல்லோரையும் ஒரே பாவத்தினால் ஒரே மாதிரி சோதிக்கமாட்டான், ஆளுக்கு ஏற்றாற்போல் சோதனைகளை மாற்றுவான். இயேசு தேவனுடைய குமாரனாயிருந்தும் கூட, அவர் மாமிசத்தில் இருந்த காலத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டார். மாமிசத்தில் இருக்கிற உங்களுக்கும் எனக்கும் இருக்கிற பலவீனம் அவருக்கும் இருந்தது. வேதனை, பசி, தாகம், களைப்பு என்று எத்தனையோ பிரச்சனைகள். ஆகையால் அவர் சோதிக்கப்பட்ட பொழுது அவருக்கும் கூட ஆறுதலும் பெலனும் தேவைப்பட்டது. அவருடைய தொண்டர்களில் ஒருவனே அவரைக் காட்டிக் கொடுத்தான். சமயம் நேரிட்ட பொழுதெல்லாம் அவர் மீது பொறாமை கொண்டு வகைபாடி குற்றம் கண்டு பிடித்துக் கொண்டிருந்த மார்க்க, அரசியல் எதிரிகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. பல பாடுகளை, அவமதிப்பைச் சகித்துக் கொண்டு மரணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது, இன்று நம்மில் எத்தனை பேர் அப்படிப்பட்ட கொடுமையான துன்பங்களைச் சகித்துக் கொள்ள முடியும்?

அவர் தேவகுமாரன்; அவருக்குப் பரம பிதா துணை நின்றார். அதனாலே தான் முடிந்தது என்று நாம் கூறி நம்முடைய இயலாமைக்கு

சமாதானம் சொல்லலாம். அது உண்மைதான் அவருக்கு மட்டுமல்ல. உனக்கும் எனக்கும் கூட பரமபிதாவின் துணை உண்டு. அவரை நோக்கி கூப்பிடு. உன்னுடைய கஷ்டம், நோய், துன்பம் அனைத்தும் அவருக்குத் தெரியும் நம்மீது அவருக்கு அக்கறை உண்டு நமக்கு உதவி செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் நாம் பல சமயங்களில் கூப்பிடுவதில்லையே, உதவி கோருவதில்லையே.

சோதனைகளைப் பற்றி வேதம் கூறுகிற சில உண்மைகளைச் சிந்தித்துப் பாருங்கள் "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை, தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடம் கொடாமல் சோதனையைத் தாங்க தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார், (1கொரி: 10:13)" கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை சோதனையின்று இரட்சிக்கவும். அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத் தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" 2 பேது 2:9. "பொறுமையைக் குறித்து நான் சொன்ன வசனத்தை நீ காத்துக் கொண்டபடியால் பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும் படியாக பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப் போகிற சோதனைக் காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்." வெளி 3:10 சோதனைகளைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான் அவன் உத்தமன் என்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான் யாக் 1:12.

மேற்கூறிய வசனங்களினால் நாம் மிகவும் தேற்றப்படுகிறோம். நாம் விரும்பிக் கேட்டால் தேவன் நமக்கு உதவி செய்யக் காத்திருக்கிறார். அந்த நாட்களில் பிடிவாதமாய்க் கர்த்தருடைய ஆலோசனைகளை உதறித் தள்ளி வந்த இஸ்ரவேல் மக்களைப் போல் நாமும் நடந்து கொண்டு, பாவத்தோடு சமரசம் செய்து கொண்டு அதில் உழன்று வேதனைப்பட்டால் நீங்கள் மற்றவர்களைக் குற்றஞ் சொல்லிக் கொண்டு திரிவதில் அர்த்தமில்லை. நீங்களே அதற்குப் பொறுப்பு. கர்த்தர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு உதவி செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார். நாம் அவரை நோக்கிக் கூப்பிட்டால் விடுதலையளிப்பார். அவர் சோதனைகளை வென்றவர். ஆனபடியால் சோதனையின் கொடூரத்தை அவர் அறிவார். நம்முடைய சோதனை நேரங்களில் நாம் அவரை நோக்கி விண்ணப்பித்தால் அவர் பரிதாபப்படுகிறவர் மட்டுமல்ல; நமக்கு ஒத்தாசையும் செய்வார்,

சாத்தான் மற்றும் அவனுடைய தூதர்களைக் காட்டிலும் இயேசு வல்லமையுள்ளவர் என்பதனை ஞாபகத்தில் வைத்துக் கொள். ஆகவே சாத்தானை எதிர்த்துப் போராடும் போது நீ ஒற்றையாய் செல்லாதே; கர்த்தரை துணைக்கு அழைத்துக் கொள், வெற்றி நிச்சயம்.

— J. C. சோட்

# நிழலும் பொருளும்

இன்று கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளுகிற மக்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவம் யூத மார்க்கத்தின் தொடர்ச்சி என்று தவருக எண்ணிக் கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். ஒரு வேளை பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் ஒன்ருக இணைக்கப்பட்டு ஒரே நூலாக '' பரிசுத்த வேதாகமம்'' என்று அழைக்கப்படுகிறதினுலும் இரு மார்க்கத்தாருக்கும் பிதாவாகிய தேவன் பொதுவாக இருப்பதும் அவ்வாறு அவர்கள் எண்ணுவதற்குக் காரணமாக இருக்கிறதா ? என்று தெரியவில்லை,

பழைய ஏற்பாடு இல்லாமல் புதிய ஏற்பாட்டைப் புரிந்து கொள்வது முடியாது என்பதும் புதிய ஏற்பாட்டின் வேர் பழைய ஏற்பாட்டில் தான் உள்ளது என்பதும், இரண்டுக்கும் மையமாக, நாயகராக கிறிஸ்து இருக்கிருர் என்பதும் மெய்யே. ஆனுல் பழைய ஏற்பாட்டின் நோக்கமும் முக்கியத்துவமும் புதிய ஏற்பாட்டின் நோக்கமும் முக்கியத்துவமும் வித்தியாசமானவைகள் என்பதைச் சற்றுப் பொறுமையாய் பகுத்துப் படித்தால் புரியும். இது இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சனையல்ல; இயேசு கிறிஸ்துவையும், அவர் உலகத்துக்கு வந்த நோக்கத்தையும் சரியாகப் புரிந்து கொள்ளாத யூதர்கள் பல சமயங்களில் இடறல் அடைந்தார்கள், ஒரு கட்டத்தில் அவருடைய முக்கியத்துவத்தையும், உபதேசத்தையும் விளக்கிக் கூறும் போது கீழ்க்காணும் உவமையைச் சொல்லுகிருர், '' ஒருவனும் புதிய வஸ்திரத் துண்டை பழைய வஸ்திரத்தின் மேல் போட்டு இணைக்கமாட்டான். இணைத்தால் புதியது பழையதைக் கிழிக்கும்; புதிய வஸ்திரத் துண்டு பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது,

ஒருவனும் புது திராட்சை ரசத்தை பழந்துருத்திகளில் வார்த்து வைக்க மாட்டான். வார்த்து வைத்தால் புது இரசம் துருத்திகளைக் கிழித்துப் போடும் இரசமும் சிந்திப்போம்; துருத்திகளும் கெட்டுப்போம்

புது இரசத்தைப் புது துருத்திகளில் வார்த்து வைக்க வேண்டும். அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்.

அன்றியும் ஒருவனும் பழைய இரசத்தைக் குடித்தவுடனே புது இரசத்தை விரும்ப மாட்டான். பழைய இரசமே நல்லதென்று சொல்லுவான் என்ருர். (லூக் 5:36-39)

மேற்கூறிய வசனப்பகுதியில் உள்ள உவமையின் மூலம் கர்த்தர் கூற விரும்பும் செய்தி என்ன ? யூதமார்க்கம் பழைய இரசத்துக்கும் கிறிஸ்தவ மார்க்கம் புதிய இரசத்துக்கும் ஒப்பாகும். இரண்டும் வெவ்வேருனவைகள் இவை இரண்டையும் ஒன்ருக நினைப்பது தேவனுடைய திட்டத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாத குழப்ப நிலையைக் காட்டுகிறது,

யூத மார்க்கம் ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத் தத்தங்களின் மேல் எழுப்பப்பட்ட மாளிகையாகும். ஆபிராம் கல்தேயர் நாட்டில் உள்ள ''ஊர்'' என்னும் பட்டணத்தில் இருக்கையிலேயே 1 ''நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப் படுத்துவேன் 2 நீ ஆசீர்வாதமாக இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிப்பவர்களைச் சபிப்பேன், 3 பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்கிறார். ஆதி 12:2,3

மேலும் ஆதி 15:7ல் இந்த வாக்குத்தத்தத்தை உறுதி செய்யும் வகையில் ''இந்த தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் பொருட்டு உன்னை ''ஊர்'' என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்து வந்த கர்த்தர் நானே என்கிறார். மேலும் சில ஆண்டுகள் சென்று ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயது நிரம்பினவரான போது ஆபிராம் என்று இருந்த அவருடைய பெயரை ஆபிரகாம் என்று மாற்றி அவருக்குக் கொடுத்த வாக்குறுதியை மீண்டும் உறுதி செய்து '' நீ பரதேசியாய்த் தங்கி வருகிற கானான் தேசம் முழுவதையும் உனக்கும், உனக்குப் பின் வரும் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்கிறார். ஆதி 17:8

மேலே சொல்லப்பட்டுள்ள மூன்று வாக்குத் தத்தங்களையும் கவனமாய்ப் பாருங்கள்.

வரப்போகிற வாழ்க்கையைப் பற்றியோ, பரலோகத்தைப் பற்றியோ ஒரு வார்த்தையும் இல்லை, எல்லாம் இந்த உலகத்தைப் பற்றியதே, அதிலும் குறிப்பாக கானான் என்னும் ஒரு குட்டி நாட்டைப் பற்றியும், இந்த உலகத்துக்கடுத்த ஆசீர்வாதத்தைப் பற்றியும் தான் குறிப்பிடுகிறது, பின்னர் இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்துக்குள் வந்த பிறகும் கூட அவர்கள் தலைவனாகிய மோசே ''இந்த நியாயங்களை நீங்கள் கேட்டு கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், அப்பொழுது உன் தேவனாகிய கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையையும் கிருபையையும் உனக்காகக் காத்து......ஆசீர்வதிப்பார் (உபா 17:12,13) அதன்பிறகு 18-ம் வசனம் வரையிலும் அவர்களுக்கு அளிக்கவிருக்கும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களையும், கர்ப்பக்கனிகள், ஆட்டு மந்தைகள், நிலத்தின் கனிகளின் பெருக்கத்தையும், வியாதிகளிலிருந்து விடுதலையையும் சத்துருக்கள்மீது வெற்றியையும் பற்றிக் குறிப்பிடுகிறார். இவைகள் ஒன்றாகிலும், இந்த உலக ஆசீர்வாதங்களைத் தவிர மறுமைக்கான ஆசீர்வாதங்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லை பரலோகம், நரகம் என்ற பேச்சே எழவில்லை, எல்லாம் உலகத்துக்கடுத்த காரியங்கள் தான்.

அதே போன்று தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் தொழுகை சம்பந்தமான காரியங்களுக்கு வரும் போதும் யூத மார்க்கத்துக்கும், கிறிஸ்தவத்துக்கும் உள்ள முரண்பாட்டை நாம் தெளிவாகக் காண முடியும். ஆசரிப்புக் கூடாரம் கட்டுவதைப் பற்றிச் சொல்லுகிற யாத் 25 முதல் 30 அதிகாரம் வரை உள்ள வசனப் பகுதியிலோ அல்லது ஆலயத்தின் தொழுகை முறைகளைப் பற்றி விவரிக்கிற 2 நாளாகமம் 2-ஆம் அதிகாரத்திலிருந்து 7-ஆம் அதிகாரம் உள்ள வசனப் பகுதியிலோ தேவ அங்கீகாரம் பெற்ற வெளிப்படையான முறையான சடங்காச்சாரமான உலகியல் முறைகள் தான் தென்படுகின்றனவேயன்றி ஆவிக்குரிய காரியங்களைக் காண முடிவதில்லை.

பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் ஒப்பு நோக்கி விளக்கிக் கூறும் நோக்கத்தோடு எழுதப்பட்ட எபிரேய நிருபத்தை தியானத்துடன் வாசித்துப் பார்த்தால் பழைய, புதிய உடன் படிக்கையின் உடன்பாட்டை விட முரண்பாடே அதிகமாகக் காணப்படுகிறது. முந்தியது கட்டளை; பிந்தியது கிருபை. மக்கள் இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பி, தேவன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் வீணாக்கி கொண்டிருக்கிறதே போல் இன்று வரை கிறிஸ்தவ உலகம் இந்த இரண்டு உடன்படிக்கைகளுக்குப் உள்ள வித்தியாசத்தை வேறுபடுத்திப் பார்க்கத் தொடர்ந்து மறுத்து வருகிறது மட்டும் அல்லாமல் இந்த இரண்டையும் ஒன்று படுத்தும் வேண்டாத முயற்சியில் ஈடுபட்டு தன்னுடைய நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டு உடன்படிக்கைகளிலும் காணப்படுகின்ற சில காரியங்களை ஒப்பு நோக்கி அதில் உள்ள முரண் பாடுகளைக் கவனியுங்கள்.

யூதர்களுக்கு இவ்வுலக ஆசீர்வாதங்கள் வாக்குத் தத்தம் செய்திருப்பதை முன்பு பார்த்தோம். கீழ் வரும் வசனத்தைப் படித்துப் பார்த்தால் கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் தான் வாக்களிக்கப்பட்டிருப்பதைக் காணமுடியும். ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.'' என்கிறது எபே 1:3. அது மட்டுமோ? ''இந்த உலகத்தில் உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு என்று எச்சரிக்கிறார் இயேசு (யோவான் 16:33) ஏனெனில் '' நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும்... உலகம் உங்களைப் பகைக்கிறது'' (யோவான் 15:19)இந்த வசனங்களில் நமக்கு உலகத்தை ஜெயிப்போம் அல்லது ஜெயிப்பதற்கு உதவி செய்வேன் என்றோ நமக்கு உறுதியளிக்கப் படவில்லை. மாறாக உங்களுக்குத் துன்பம் இருக்கும் என்று எச்சரிப்பதைக் கீழ்வரும் வசனங்களும் உறுதி செய்கின்றன II தீமோ, 3:12; 1 தெச 3;3

யூத மார்க்க ஆராதனை முறைமையின்படி, மக்களுக்கு தேவனுடைய சந்நிதானத்துக்கு நேரடியாகப் போகும் உரிமையில்லை. பிரதான ஆசாரியனே வருடத்துக்கு ஒரு முறை மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் சென்று தனக்காகவும், மக்களுக்காகவும் பலிசெலுத்துவான் (எபி 9:7; லேவி 16:11). மேலும் யூத மார்க்கத்தில் லேவி கோத்திரத்தார் மட்டுமே ஆச்சாரிய ஊழியத்துக்கென்று பிரித்தெடுக்கப்பட்டிருந்தார்கள். மற்ற எவருக்கும் அந்த உரிமை கிடையாது. ஆனால் கிறிஸ்துவத்தில் அனைவருமே ராஜரீக ஆசரியக்கூட்டம்; தேவனுக்கு ஆவிக்குரிய பலிகளைச் செலுத்த அதிகாரம் உண்டு (1 பேது 2:5,9.) மேலும் யூத மார்க்க ஒழுங்கின்படி மக்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கான நிச்சயம் ஒன்றும் கிடையாது(எபி 10:1-3). அதனால் தான் அவர்கள் ஆண்டுதோறும் பலி செலுத்திக் கொண்டு வந்தார்கள் (எபி 10:3) ஆனால் கிறிஸ்தவத்தில் பாவமன்னிப்பாகிய மீட்பு கிறிஸ்துவுக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது எபே 1:7; கொலோ 1:14.

முதலாவது உடன்படிக்கையின்படி ஆண்டு தோறும் பலிகள் புதுப்பிக்கப்படவும், தினந்தோறும் தகன பலிக்கு ஆட்டுக்குட்டிகள் அடிக்கப்படவும் வேண்டியதாயிருந்தது (யாத் 29:38-42.) ஆனால் கிறிஸ்தவத்தில் ஒரே முறை கிறிஸ்து பலியாகி பாவ மன்னிப்பைப் பெற்றுத் தந்திருக்கிறதாக எபிரேய நிருப ஆசிரியர் கூறுகிறார் எபி 10:14.) 2 நாளா 2 முதல் 7 அதிகாரங்களில் தேவாலயத்தைப் பற்றிய வர்ணனைகளைக் கவனியுங்கள். அந்த பிரம்மாண்டமான கட்டிடம் பல ஆட்கள் பல ஆண்டுகள் பாடுபட்டு சுமார் 1000 கோடி ரூபாய் பொருட்செலவில் நிர்மாணிக்கப்பட்டது. அது மனித முயற்சியால் நிர்மாணிக்கப்படவைகளுள் மிகுந்த பொருட் செலவும், விஸ்தார அமைப்பு முறைகளும் கொண்டது என்பதில் சந்தேகமில்லை. அதை மனதில் நினைத்துக்கொண்டுதான் பிற்காலத்தில் கட்டப்பட்ட கிறிஸ்தவக் கோவில்கள் மிகப் பிரம்மாண்டமான கட்டடங்களாக உருவெடுத்தன என்றால் மிகையாகாது. ஆனால் சபை கட்டுமானத்தைப் பற்றி ஆவியானவர் கூறுகிற விளக்கம் சபைக் கட்டடங்கள் கட்டப்பட்டதைப் பற்றியோ, அவைகளைப் பிரதிஷ்டை செய்வதைப் பற்றியோ மௌனமாகவே இருக்கிறார். அல்லாமலும் நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாமலிருக்கிறீர்களா? என்றும் 1 கொரி3:16லும் ''அவர்கள் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூடிக் கட்டுப்பட்டு வருகிறீர்கள் என்று எபே 2:22லும் 'ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு, பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டுப்பட்டு வருகிறீர்கள்' என்று 1 பேது 2:5லும் வாசிக்கிறோம்.

இந்த வசனங்கள் நமக்கு தெளிவாக்குவது என்னவெனில் சபை என்பது மரத்தினாலோ, கல்லினாலோ, சலவைக்கல்லினாலோ கட்டப்பட்ட கட்டடங்கள் அன்று. அப்படிப்பட்ட கட்டடங்களில் செய்யப்படும் ஆராதனையையே தேவன் ஏற்றுக்கொள்வார். அதற்குத்தான் தேவன் முக்கியத்துவம் கொடுத்துப் பரிசுத்தப்படுத்துகிறார் என்று எண்ணுவது தவறு. மாறாக 'கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் தேவன் வாசம் பண்ணுவதில்லையென்றும் சொல்லுகிறார் அப் 17:24.'

2 நாளா 5:12-14 வரை தேவாலய ஆராதனையைப் பற்றிய வர்ணனைகளை வாசித்துப் பாருங்கள். ஆசாப், ஏமான், எதுத்தூனுடைய கூட்டத்தாரும், அவர்களுடைய குமாரர் சகோதரருடைய கூட்டத்தாருமாகிய பாடகரான லேவியரனைவரும் மெல்லிய புடவைகளைத் தரித்துக் கைத்தாளங்களையும், தம்புருகளையும், சுரமண்டலங்களையும் பிடித்துப் பலிபீடத்திற்குக் கிழக்கே நின்றார்கள்; அவர்களோடு கூட பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள் நூற்றிருபது பேர் நின்றார்கள்,

அவர்கள் ஒருமிக்க பூரிகைகளை ஊதி: ஏகசத்தமாய் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடினார்கள். ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும், பாடகர்கள் பூரிகைகள் தாளங்கள் கீத வாக்கியங்களுடைய சத்தத்தைத் தொனிக்கப் பண்ணி. கர்த்தர் நல்லவர். அவர் கிருபை என்றுமுள்ளது என்று அவரை ஸ்தோத்திரிக்கையிலும் கர்த்தருடைய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது

அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ் செய்து நிற்கக் கூடாமற் போயிற்று, கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று " என்று கூறுகிறது. இதைக் கேட்கிற நமக்கே புல்லரிக்கிறது. அதைப் பார்க்கும் பாக்கியம் பெற்றவர்கள் அனுபவித்துப் பார்த்தவர்களால் எப்படி மறக்க முடியும்? அதனால்தான் பிற்காலத்தில் கிறிஸ்துவத்தைத் தழுவிய யூதர்களும் தூய கிறிஸ்தவத்தின் எளிமைக் கோலத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல், பழைமையின் பந்தாவில் மோகம் கொண்டு கிறிஸ்துவின் பிரமாணங்களோடு மோசேயின் பிரமாணங்களையும் இணைக்க விரும்பினார்கள். அவர்களுடைய தவறுகளை உணர்த்தி வழிக்குக் கொண்டு வருவதற்கு பவுல் அப்போஸ்தலன் வெகுபாடு படுகிறார். அப்படிப்பட்ட ஒரு நிலையை விளக்கும் போது தான் பழைய இரசத்தைக் குடித்தவன் புது இரசத்தை விரும்பமாட்டான்; பழையதே நல்லது என்று சொல்லுவான்", என்கிறார் இயேசு லூக் 5:39.

இன்றைக்கு கூட கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள், ஏன் பழையதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். என்றால் பழைய பாணியில் இருக்கும் பந்தா, தோரணை, மவுசு, கண்ணுக்குக் குளிர்ச்சி போன்ற மாம்சத்தைப் பேணுகிற காரியங்களை

மனதில் கொண்டுதான் என்று எண்ணத் தோன்றுகிறது. இவ்வுலக வாழ்க்கையை மையமாகக் கொண்டு யூத மார்க்கம் போதிக்கிற புறம்பான சடங்காச்சாரங்களுக்கும் கிறிஸ்தவம் போதிக்கிற ஆவிக்குரிய வாழ்க்கை நெறிகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் குழப்புவதால் இன்று திரிந்த, கோணலான, கலப்படமான கிறிஸ்தவம் வளர்ந்து உண்மைக் கிறிஸ்தவத்தின் தூய நெறிகளையும், நியமங்களையும் மாசு படுத்தி பின்னுக்குத் தள்ளி விட்டன.

ஆகவே, கிறிஸ்தவ மக்களே! புது இரசமாகிய புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை உங்கள் நெஞ்சமாகிய புதுத் துருத்தியில் வார்த்து வையுங்கள். அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும், நம்முடைய நெறி பிறழ்ந்த மார்க்கப் பார்வை சீரடைந்து நன்மை உண்டாகும்.

E. Z. செல்வநாயகம்.

## தெய்வத் திருத்தொண்டர்களே, கவனியுங்கள்

இளமைக்குரிய இச்சைகளைத் தவிர்த்து விடுங்கள். நீதி, விசுவாசம், அன்பு ஆகிய நற்பண்பை நாடுங்கள். தூய உள்ளத்தோடு ஆண்டவரைத் தொழுவாருடன் சமாதானமாய் இருங்கள். அறிவில்லா மூட ஆராய்ச்சிகளைத் தள்ளிவிடுங்கள். இவைகள் பூசலைத்தான் விளைவிக்குமென உங்களுக்கே தெரியும்! ஆண்டவருடைய ஊழியன் பூசல் விளைவிப்பவனாய் இருத்தல் ஆகாது. எல்லாருக்கும் இனியவனாகவும், போதிக்க வல்லவனாகவும், துன்பத்தில் பொறுமையுள்ளவனாகவும் இருக்கவேண்டும். தன்னை எதிர்ப்பவர்களை சாந்தத்தோடு கடிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் கடவுள் அவர்களுக்கு மனம் திரும்பும் அருளைத் தந்து அவர்கள் உண்மையைக் காணச் செய்யக்கூடும். பிசாசின் வலையில் சிக்குண்டு அதன் விருப்பத்துக்கு அடிமைகளாயிருந்த அவர்கள் ஒருவாறு தெளிவடைந்து அவ்வலையினின்று விடுதலை பெறக்கூடும்.

## கடைசி காலத்தில் மக்களின் போக்கு

இறுதி நாட்கள் பொல்லாத காலமாயிருக்கும். மக்கள் தன்னலப்பிரியர், பொருளாசை பிடித்தவர், வீம்புக்காரர், செருக்குடையவர், பழித்துப் பேசுபவர், பெற்றோருக்கு அடங்காதவர், நன்றி கொன்றவர், இறைவனைப் புறக்கணிப்பவர், பரிவில்லாதவர், தீராப் பகையினர், புறணி பேசுபவர், தன்னடக்கமற்றவர், கொடியவர், நல்லதை வெறுப்பவர், நம்பிக்கைத் துரோகிகள், மூர்க்கர், இறுமாப்புடையவராக இருப்பர்.

கடவுளை நாடுவதைவிடச் சிற்றின்பங்களையே மிகுதியாய் நாடுவர்; பக்தியின் வேஷத்தைக் கொண்டிருப்பார்கள். ஆனால் அதன் உள்ளாற்றலைப் பேணமாட்டார்கள். இப்படிப்பட்டவர்களில் சிலர் பிறர் வீடுகளில் புகுந்து மதிகெட்ட பெண்களை வயப்படுத்திக் கொள்வார்கள். விசுவாசத்தைப் பொறுத்தமட்டில் இவர்கள் பயனற்றவர்கள்.

# கேள்வி–பதில்

**யோவான் 3:5, ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியம் என்று போதிக்கிறதா?**

"யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு எனப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்.

அவன் இராக் காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து, ரபீ! நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்; ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்.

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவா விட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அதற்கு நிக்கொதேமு, ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ? என்றான்.

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்." யோவான் 3:1-5

மேற்கூறிய வசனப்பகுதியில் மூன்றும் வசனத்தில் "ஒருவன் மறுபடியும் பிறவா விட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காண மாட்டான் என்று இயேசு கூறினார். அதை நிக்கொதேமுவினால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே 5-ம் வசனத்தில் மூன்றும் வசனத்தில் ஏற்கனவே சொன்னதை விளக்கிக் கூறுகிறார். "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவா விட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான். மூன்றும் வசனத்தில் என்ன சொன்னாரோ அதையேதான் ஐந்தாம் வசனத்திலும் சொல்லுகிறார். ஐந்தாம் வசனத்தில் என்ன சொன்னாரோ அதையேதான் மூன்றும் வசனத்திலும் சொல்கிறார். ஆக மறுபடியும் பிறப்பது என்பதும் (வ 3) ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பது (வ 5) என்பதும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காண்பது என்பதும் (வ 3) தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிப்பது என்பதும் (வ 5) ஒரே காரியம்தான், என்று விளங்குகிறது ஒருவன் தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிப்பதற்கு ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது அவசியம் என்றால் அந்த இரட்சிப்பு தேவனுடைய இராஜ்ஜியத்தில்தான் கிடைக்கும் என்பதும் உண்மையானால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது இரட்சிப்புக்கு அவசியம்.

2, ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் என்று கூறும் போது அதன் பொருள் என்ன? உதாரணமாக, ஒரு கல்லூரி முதல்வர் மாணவர்களை நோக்கி; இம் மாதம் 10-ந் தேதிக்குள் உணவுக் கட்டணம் கட்டாதவர்களுக்கு விடுதியில் உணவு வழங்கப் பட மாட்டாது, என்கிறார் என்று வைத்துக்கொள்வோம், அதற்கு என்ன பொருள்? (அ) 10-ம் தேதிக்குள் உணவுக் கட்டணம் செலுத்துபவர்களுக்கு உணவு வழங்கப்படும். (ஆ) 10-ம் தேதிக்குள் உணவுக் கட்டணம் செலுத்தாதவர்களுக்கு உணவு கிடைக்காது. (இ) ஒருவனுக்கு உணவு வேண்டுமென்றால் அவன் 10-ந் தேதிக்குள் உணவுக் கட்டணம் செலுத்தி விட வேண்டும் என்று பொருள்படும். அதே போல் யோவான் 3:5ன் அர்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு முயற்சிப்போம். யோவான் 3:5 போதிப்பது இதுதான் (அ) யாரெல்லாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கிறார்களோ அவர்கள் எல்லாம் தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க முடியும் (ஆ) எவன் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வில்லையோ அவன் தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க முடியாது, (இ) எவன் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கிறானோ அவன் மட்டுமே தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்கத் தகுதியுள்ளவன். ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கிற வனுக்கு என்னென்ன அவசியமோ அந்தக் காரியம் தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க விரும்புகிறவனுக்கு அவசியம். தேவனுடைய ராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க விரும்புகிறவனுக்கு வேறு மார்க்கம் கிடையாது என்று தெளிவாகப் போதித்தார்.

3. மத் 16:18, 19ல் கார்த்தர் சபை என்பதும் இராஜ்ஜியம் என்பதும் ஒரே தெய்வீக ஸ்தாபனம் என்று கூறுகிறார், கர்த்தர் இந்த இரண்டு வார்த்தைகளையும் ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை மாற்றி மாற்றி உபயோகித்திருக்கிறார்... ..இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்.'' என்றும்.....பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை நான் உனக்கு என்றும் தருவேன் என்றும் கூறினார், கர்த்தருடைய சபையும் அவருடைய இராஜ்ஜியமும் ஒரே தெய்வீக ஸ்தாபனத்தைக் குறிக்கிறது, அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தின் கருப் பொருள் யாதெனில்: ஒருவன் எப்படி சபையாகிய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க முடியும் என்பதாகும். இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள குணப்பட்டவர்களின் பட்டியலைப் பார்ப்பீர்களானால், ஒருவன் தேவ னுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிப்பதற்கு கிறிஸ்துவின் பெயரால் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான் என்று பார்க்கிறோம், யோவான் 3:5 ராஜ்ஜியத்துக்குள் பிரவேசிப்பதற்கு ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது ஒன்றேவழி என்று போதிக்கிறபடியினாலும் சபை யென்றாலும் இராஜ்ஜியம் என்றாலும் ஒரே தெய்வீக ஸ்தாபனத்தைத் தான் குறிக்கிறது என்பதாலும் நாம் கீழ்க் கண்ட முடிவுக்கு வரவேண்டி யுள்ளது. அதாவது ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது என்றாலும்

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது என்றாலும் ஒன்றேதான். ஆகவே கர்த்தருடைய கட்டளை அன்றும் இன்றும் ஒருவன் ஞானஸ்நானம் பெறா விட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க முடியாது.

4. இதை இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு மேலும் சில காரியங்களைப் பார்ப்போம். (அ) தேவனுடைய இராஜ்ஜியம் என்பது நமது கர்த்தருடைய சபை (மத் 16:18, 19;) கொலோ 1:13) (ஆ) ஆனால் சபை கர்த்தருடைய ஆவிக்குரிய சரீரமாக இருக்கிறது. (கொலோ 1:18) அப்படியானால் சபையில் இருப்பது என்றால் கர்த்தருடைய சரீரத்தில் இருப்பது என்று அர்த்தம். அதாவது கிறிஸ்துவில்தானே இருப்பதாகப் பொருள்படும். (இ) ஆனால் ஒருவன் எப்படிக் கிறிஸ்துவுக்குள் வர முடியும்? இரண்டு எளிய அடிப்படை சத்திய வசனங்கள் அதற்குப்பதில் அளிக்கின்றன. (ரோமர் 6:4; கலா 3;27) இவ்விரண்டு வசனங்களும் கூறுவது ஒன்றே இரண்டுமே ஒருவன் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். என்றும் கூறுகிறது வேறு வழி இருப்பதாக வேதாகமம் முழுவதும் தேடி வாசித்தாலும் எந்த வசனமும் சொல்லுவதில்லை. (ஈ) இராஜ்ஜியத்தில் இருப்பது என்றால் சபையிலும் கிறிஸ்துவிலும் இருப்பது என்று பொருள். ஆனால் ஒருவன் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகிறான் என்று கூறும்போது ஒருவன் சபைக்குள் ஞானஸ்நானம் பெறுகிறான், என்று பொருள். ஒருவன் இராஜ்ஜியத்துக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுகிறான் என்று சொன்னாலும் தவறில்லை, (உ) ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்கிறான்; வேற்று மார்க்கமே கிடையாது என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்படியானால் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது என்றாலும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது என்றாலும் சந்தேகமில்லாமல் ஒன்றுதான் அதனால்தான் ஒருவன் ஞானஸ்நானம் பெறாவிட்டால்தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள்பிரவேசிக்கமுடியாது.

பதில்: ஒருவன் இரட்சிக்கப்பட வேண்டுமானால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். ராய் டீவர்.

**சத்தியத்தை விட்டுப் பின்வாங்கிப் போகிறவர்களுடைய நிலை**

கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால் அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்.

அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டுவிலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.

நாய்தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது

# அப்போஸ்தலன் பவுலின் நிருபங்கள்
## — ஓர் கண்ணோட்டம் —

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருத் தொண்டர்களில் மிகவும் புகழ் வாய்ந்தவர் அப்போஸ்தலன் பவுல் என்பதில் இரண்டு விதமான கருத்துக்கு இடமில்லை. புதிய ஏற்பாட்டில் சுமார் கால் பங்கு அவருடைய நிருபங்கள் தான். ஆனபடியால் அந்த நிருபங்களைப் பற்றியும், அதன் நோக்கம், அமைப்பு முறைகளைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்வது நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பேருதவியாக இருக்கும்.

அப்போஸ்தலனாகியபவுல் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அப்போஸ்தலர் நடபடிகளிலும் பவுலடியார் நிருபங்களிடமிருந்தும் தெரிந்து கொள்ளலாம். அவர் சுமார் கி.பி. 10-ஆம் ஆண்டில் பென்யமீன் குலத்தைச் சேர்ந்த ஒரு யூத குடும்பத்தில் பிறந்தார். அக் குடும்பம் இன்றைய துருக்கியிலுள்ள தர்சு பட்டணத்துக்கு நாடு கடத்தப்பட்டிருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. அக் குடும்பத்துக்கு செல்வமும், செல்வாக்கும் இருந்திருக்க வேண்டும். எனவே தான் அதற்கு ரோமைக் குடிமை உரிமைபெறும் வாய்ப்பு கிட்டியது.

அவருடைய இயற்பெயர் சவுல். சிறு வயதிலிருந்தே யூத மார்க்கக் கொள்கைகளிலிருந்து சிறிதும் பிறழாத நெறியில் வளர்ந்து வந்தார். அன்று மேற்கு ஆசியாவில் கல்வி மொழியாக கிரேக்கம் இருந்தது. அதில் அவர் நன்கு கற்றுத் தேறியபிறகு எருசலேம் நகருக்குச் சென்று புகழ்பெற்ற யூதப் பேராசிரியரும் நியாயப் பிரமாணங்களில் சிறப்புப் பட்டமும் பெற்ற கமாலியேல் என்பவரின் நேரடிப்பார்வையில் எபிரேயு மொழி மற்றும் யூத மார்க்கக் கல்வி கற்றார். இவ்வித சூழ்நிலை காரணமாக மிகவும் பற்றுறுதி கொண்ட பரிசேயர் ஆனார்.

இயேசு வாழ்ந்தபோதே சவுல் பாலஸ்தீன நாட்டில் இருந்தாரா? இயேசுவைச் சந்தித்தாரா? என்பவைகள் ஐயத்துக்குரியவைகள். சவுலை நாம் முதலில் சந்திப்பது அப்போஸ்தலர் நடபடிகளில் தான் அதில் அவர் கிறிஸ்தவர்களின் பகைவனாக அறிமுகமாகிறார். ஸ்தேவான் கல்லால் எறிந்து கொல்லப்பட்டபொழுது, கொலையாளிகளின் துணிமணிகளையும், உடமைகளையும் காவல் செய்து கொண்டிருந்தார். தமஸ்கு நகரக் கிறிஸ்தவர்களைப் பிடித்துத் துன்புறுத்தும் எண்ணத்துடன் அங்கே போய்க்கொண்டு இருந்த பொழுது வழியில் இயேசு அவரை ஆட்கொள்ளுகிறார். கிறிஸ்தவத்தை வெறுத்து அதைப் பூண்டோடு ஒழித்துவிட வேண்டும் என்றிருந்த சவுல் அந்தச் சந்திப்புக்குப் பிறகு கிறிஸ்துவுக்கு அடிமையாகிறார்.

இயேசு விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டு வாழ்நாள் முழுவதும் அவருக்குச் சிறப்பாகத் தொண்டாற்றினர். அதைப் பற்றிய விவரங்களை அப்போஸ்தலர் 13-ஆம் அதிகாரம் முதல் 28-ஆம் அதிகாரம் வரை சொல்லப்பட்டிருக்கிறது. அவர் மொத்தம் மூன்று சுவிசேஷப் பயணங்களை (Missionary tour) மேற்கொண்டார். முதல் பயணத்தில் தற்போதைய சைப்ரஸ், துருக்கி என்னும் நாடுகளுக்குச் சென்றார். எருசலேமில் நடந்த முதல் கிறிஸ்தவ மாநாட்டில் கலந்துகொண்டார். பின்னர் தனது இரண்டாவது சுவிசேஷப் பயணத்தைத் தொடங்கி துருக்கியிலும், கிரேக்க நாட்டிலும் சுவிசேஷப் பிரகடனம் செய்தார். மூன்றும் பயணத்தின் போது மீண்டும் கிரேக்க நாடுகளுக்குச்சென்றார்.

இவைகளுக்குப் பிறகு அப்போஸ்தலன் பவுல் தாய் நாடு திரும்பி வந்தார். மாபெரும் பணி செய்து விட்டு வந்தவருக்குப் பாராட்டுத் தெரிவிக்கிறதுக்குப் பதில் பகை பாராட்டினார்கள். யூத மார்க்கத்தின் விரோதி என்று முத்திரை குத்தி குழப்பத்தை உண்டாக்கினர், அதன் விளைவாகச் சிறைப்படுத்தப்பட்டார்,

அவருடைய வேண்டுகோளின்பேரில் ரோமப் பேரரசர் நீரோவால் நியாயம் விசாரிக்க ரோமுக்கு அனுப்பட்டார். கப்பல் பயணத்தில் எதிர்பாராத இடறல்கள் ஏற்பட்டன, கப்பல் மால்டா கடற் கரையில் மோதி உடைந்தது. எனினும் பவுல் அடியார் பாதுகாப்பாக ரோமை சென்றடைந்தார். அதற்கு மேல் பவுல் அடியாரின் வாழ்க்கையைப் பற்றி தெளிவாக ஒன்றும் தெரியவில்லையாயினும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை கிடைத்திருக்கலாம் என்று தோன்றுகிறது, அதற்குப் பிறகு ஸ்பெயின் நாட்டுக்குச் செல்ல எண்ணியிருந்ததாகத் தெரிகிறது. மீண்டும் ஒரு முறை சிறைப்படுத்தப்பட்டு ரோமாபுரியில் தலை வெட்டுண்டு இறந்திருக்கலாம் என்று ஊகிக்கின்றனர்.

## பவுலடியார் எழுதிய நிருபங்கள்

வேதாகமத்தில் பவுலடியாரின் நிருபங்கள் அளவு வரிசைப்படி, அதாவது முதலில் நீளமானவை, அதன் பின் குறுகியவை என்று தேய்பிறை வரிசையில் வைக்கப்பட்டுள்ளன, ஆனால் அதை விட அவர் எழுதிய கால வரிசையில் படித்தால் இன்னும் நலமாக இருக்கும்,

## தெசலோனிக்கா பட்டணத்தாருக்கு எழுதிய இரு நிருபங்கள்

பவுலடிகளார் எழுதிய நிருபங்களில் இவைகளே முதல் முதலில் எழுதப்பட்டவைகள். வட கிரேக்கத்தில்உள்ள இப் பட்டணத்துக்கு இவர் தமது இரண்டாம் சுவிசேஷப் பயணத்தின் போது சென்று சிலரைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தார். அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காக மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். அவர்கள் சிறுமைப்பட்டாலும் விசுவாசத்தில் பெருமை கொண்டனர், உறுதியாய் நின்றனர்.

அந்நேரம் பவுலடியார் கொரிந்து பட்டணத்தில் இருந்தார். அவர்களுக்கு ஏற்பட்டிருந்த இன்னல்களுக்காக வருந்தியும் அவர்களுடைய விசுவாசத்தை பாராட்டியும், அவர்களைத் தேற்றி ஆறுதலாக சில அறிவுரைகள் வழங்கியும் இம் முதலாம் மடலை எதிழுஞர். சுமார் கி. பி. 50, 51ல் எழுதப் பெற்ற இம்மடல் இறுதியில் உயிர்த்தெழுவோம், கிறிஸ்து மீண்டும் வருதல் எப்போது நிகழும் என்று தெரியாததால், எப்போதும் தயாராக இருத்தல், ஆகிய காரியங்களை வற்புறுத்துகிறது. இரண்டாவது மடல், மீண்டும் ஒரு ஆண்டு காலத்துக்குள் எழுதப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதே முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. கிறிஸ்து விரைவில் வருகிறார் என்ற பொய் வதந்தி பரப்பப்பட்டதால் அதை மெய்யென்று நம்பி சில கிறிஸ்தவர்கள் வேலை செய்து உழைப்பதை நிறுத்தி விட்டுச் சோம்பித் திரியத் தொடங்கினர். இதைக் கண்டித்துத் திருத்துகிறுர்; கிறிஸ்து மீண்டும் வருவதற்குரிய அடையாளங்கள் பற்றிய ஹேஸ்யங்களை விட்டு. ஆண்டவர் எப்பொழுது வந்தாலும் நாம் ஏற்றுக் கொள்ளப்படும்படியான முறையில் நம் வாழ்க்கையைச் சீரமைத்துக் காத்திருக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகிறுர்.

கொரிந்தியருக்கு எழுதிய நிருபங்கள்: கொரிந்து நகரம் கிரேக்க நாட்டில் ஓர் அனைத்துலகத் துறைமுகமாக அன்று விளங்கியது. அப்பட்டணத்தில் பவுல் அடிகளார் சுமார் ஒன்றரை ஆண்டுகள் தங்கி சுவிசேஷப் பிரகடனம் செய்து சபையையும் ஸ்தாபித்தார். அங்கிருந்து அவர் புறப்பட்டுச் சென்றதும் புதுச் சிக்கல்கள் முளைத்தன. முதற்கண், புதுக் கிறிஸ்தவர்களுக்குப் போதிய நற்போதனை அளிக்கப்படவில்லை, அம் மாபெரும் நகரில் நாளுக்கொரு புதிய மெய்யியல், இறையியல் கொள்கைகள் தோன்றி மக்களைக் குழப்பிக் கொண்டு வந்தன. இவற்றுல். புதுக்கிறிஸ்தவர்களுடைய நிலை அசைவுற்றது, மேலும் இங்கு வாழும் மக்களின் ஒழுக்க நிலை மிகவும் தாழ்ந்து கிடந்தது. கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களும் இதற்கு விதி விலக்கல்ல. கொரிந்து பட்டணக் கிறிஸ்தவர்கள் கட்சி மனப்பான்மையோடு கிறிஸ்தவத்தைப் பார்த்தனர். தங்களுக்குப் பிரியமான தலைவர்களைச் சார்ந்து கொண்டு கிறிஸ்துவையும் அவருடைய போதனைகளையும் அசட்டை செய்தனர். இவைகளால் பவுல் அப்போஸ்தலன் துக்கடைந்து இவர்களைக் கண்டித்தும், அறிவுறுத்தியும் பல மடல்கள் எழுதியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஒருமுறை அவர்களை நேரிலும் சந்தித்தார்.

பவுல் அப்போஸ்தலன் கொரிந்து பட்டணத்துச் சபைக்கு எத்தனை கடிதங்கள் எழுதினர் என்பது பற்றி வேத அறிஞர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு உண்டு, நமக்குக் கிடைத்துள்ள இரு மடல்களைத் தவிர வேறு இரண்டு மடல்களையும் அவர் எழுதியிருப்பார் என்பாரும் உளர். அவற்றுள் ஒன்று இப்போதுள்ள முதல் மடலுக்கு முன்னரும்

மற்றொன்று இப்போதுள்ள இரு மடல் இடையிலும் எழுதப்பட்டிருக்க வேண்டும். அவை இப்போது கை வசம் இல்லை என்பர். வேறு சிலர் கருத்துப்படி, அவை இப்போதுள்ள இரு மடல்களுக்குள் இடைச்செருகலாக அமைந்துள்ளன, 2 கொரி 6:14-7:1 என்னும் பகுதியும் 2 கொரி 10-13 அதிகாரங்களும் அவ்விருமடல்களாகும் என்பர். இக் கருத்தின்படி கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாவது மடல் ஒரே தன்மை கொண்ட ஒரு மடல் அன்று; பல மடல்கள் சேர்ந்த கதம்பமாகும்,

தற்சமயம் நம் வசம் இருக்கும் இரு மடல்களும் அன்றைய கிறிஸ்தவர்களின் வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடிகள் எனலாம் அந்தத் தொடக்க நாட்களில் கூட எல்லாமே ஒழுங்காக இல்லை. அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி. பவுலாரின் அறிவுரைகள். மனித குலத்தின் பிரச்சனைகளுக்கு வழி காட்டும் ஒளியாய் விளங்குகிறது.

கலாத்தியருக்கு, உரோமையருக்கு எழுதிய நிருபங்கள் பவுல் தனது இரண்டாவது சுவிசேஷப் பயணத்தின் போது சின்ன ஆசியாவின் நடு மாநிலமாக இருந்த கலாத்தியாவிற்குச் சென்றார், அங்கு நல்ல வரவேற்புப் பெற்றார். அங்கிருக்கும் காலத்தில் அவர் நோய்வாய்ப்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது ஆத்தும பாரத்தோடு ஊழியம் செய்தார் கலா 4: 12-20. ஆனால் அவர் அங்கிருந்து புறப்பட்ட பின்னர் சில சங்கடங்கள் ஏற்பட்டன, எருசலேம் நகரில் கூடிய முதல் கிறிஸ்தவ மாநாட்டில் (அப் 15: 22-29) எடுத்த முடிவுக்கு விரோமாக சிலர் போதித்து வந்தனர். புற இன கிறிஸ்தவர்கள் நியாயபிரமாணத்தையும் பின் பற்ற வேண்டும் என்றும் வற்புறுத்தினர். இவர்களுடைய போக்கைக் கண்டித்து எபேசு பட்டணத்திலிருந்து இம் மடலை எழுதியிருக்கலாம்,

அவர்கள் கூறிய வழியில் மக்கள் நடந்தால் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு பிரிவு ஆகிவிடும், தனித் தன்மையை இழந்துவிடும், நற்செய்தி என்ற பொருளுக்கே அர்த்தம் இல்லாமல் போய் விடும். ஒருவன் நியாயப் பிரமாணத்தின் வழியாய் மீட்பைப் பெற முடியுமென்றால் கிறிஸ்துவின் சிலுவை மரணம் பொருளற்றதாகி விடும் என்பன போன்ற காரியங்களை இம்மடல் அழுத்திக் கூறுவதால் இது மற்ற மடல்களைவிட கடுமையானதாகக் கருதப்படுகிறது.

இம்மடலில் கூறிய உண்மைகளையே பவுல் ரோமாபுரிக் கிறிஸ்தவர்களுக்கும் எழுதுகிறார். ஆனால் முறையாக, விரிவாக எழுதி விளக்குகிறார். ரோமாபுரியிலுள்ள சபை, யாரால் தொடங்கப்பட்டது என்பது சரியாகத் தெரியவில்லை. அம்மடலை அவர் கொரிந்து பட்டணத்திலிருந்து எழுதினார். அச்சமயம் அவர் ரோமாபுரிக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவலில் இருந்தார் ஆனால் அது எப்படியோ தடைப்பட்டுவிட்டது ரோமர் 1:12-13.

கடவுளின் அருள் மனிதனுக்குத் தேவை; அதி 1:3, அவ்வருளைப் பெற விசுவாசம் தேவை அதி 3:21;4:11; அருளால் பாவத்தினின்றும் சாவினின்றும் விடுதலை பெறுகிறோம் 5-12-7:25; விசுவாசிப்பவர்களுக்கு பரிசுத்த ஆவியின் வழியாய்ப் புதுவாழ்வு வழங்கப்படுகிறது அதி 8. இந்த உண்மைகளை விரித்து உரைப்பதால் இம்மடல் இறையியல் பற்றி எழுதப் பெற்ற ஓர் ஆய்வுக் கட்டுரை எனலாம்.

அப்போஸ்தலன் பவுல் எழுதிய மடல்களுள் இதுதான் மிக நீளமானது. உட்பொருள் உணரக் கடினமானதும்கூட, தவறாகவும் உணரப்படலாம். ஆனால் சரியாகப்புரிந்து கொண்டால் இறையருள் பற்றிய பேருண்மையை நாம் உணர இம்மடல் பேருதவியாக இருக்கும்.

பிலிப்பியருக்கு எழுதின நிருபம் தெசலோனிக்கா போலவே பிலிப்பியும் மக்தோனியாவில் இருந்தது இந்நகரமும் பவுல் அப்போஸ்தலன் மூலமாக சத்தியத்தை அறிந்தது. இவர்கள் பவுலின் மீது சிறப்பான அன்பு கொண்டிருந்தார்கள் என்று தெரிகிறது. பிலிப்பியர் தாராள குணமுடையவர்; மும்முறை அவருக்கு பொருளுதவி செய்து மகிழ்ந்தனர் (பிலி 4:16) அவர்களுக்கு நன்றி கூறவும், உற்சாக மூட்டவும் இம்மடலை எழுதியிருக்கலாம். இது நட்புறவினைக் காட்ட எழுதப் பெற்ற மடல்; கொள்கையை விரித்துரைக்க எழுதப்பெற்ற மடல் அன்று. இருந்தாலும். ஒரு சில இடங்களில் கொள்கை பற்றிய குறிப்புகளையும் கொண்டுள்ளது. (2:5-11; 2:13; 3:8-11; 3:20,21. சிறையிலிருந்து எழுதப்பட்ட நிருபங்களில் இதுவும் ஒன்று.

எபேசியருக்கு, கொலோசேயருக்கு, பிலேமோனுக்கு எழுதின நிருபம். இம் மடல்கள் சிறைச்சாலை நிருபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. துருக்கியில் இருந்த கொலோசே பட்டணத்தில் பவுலடியாரின் கூட்டாளியான எப்பாப்பிரா ஊழியம் செய்து வந்தார். அங்கே யூதர்களில் சிலர் வான தூதர்களைப் பற்றிய கற்பனைக் கருத்துக்களைப் பரப்பினர், விருத்த சேதனம், மற்றும் யூதர் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று போதித்தனர், இதனால் விசுவாசிகள் குழப்பமடைந்தனர். அதற்கு விளக்கம் தந்து ஐயங்களைப் போக்கவே இந்த நிருபத்தை எழுதினார் என்று கொள்ளலாம். கிறிஸ்து எல்லாரையும் விட, எல்லாவற்றையும் விட உயர்ந்தவர், மூதன்மையானவர்; வானதூதரும் பிற ஆற்றல்களும் அவர்களுக்குக் கீழ்ப் பட்டவைகள் (1:15-20) கிறிஸ்து எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்தி ஒரு புது முறையைத் தொடங்கி வைத்துள்ளார். அதன்படி இயங்கும் திருச்சபை உன்னதமான தேவனின் மகிமையில் பங்கு கொள்ளுகிறது என்றெல்லாம் விளக்குகிறார்.

கலாத்தியருக்கு எழுதியவற்றை முறைப்படுத்தி விரிவுபடுத்தி ரோமருக்கு எழுதினார், அவ்வாறே கொலோசேயருக்கு எழுதியவற்றை முறைப்படுத்தி எபேசியருக்கு எழுதுகிறார். ஆனால் இந்த மடல் எபேசியருக்குத்தான் எழுதப் பெற்றது என்பது ஐயுறத்தக்கது. முதல் அதிகாரத்தின் முதல் வசனத்தில் வரும் எபேசு நகரில் எனும் வார்த்தை பல கையெழுத்துப் படிகளில் காணப்படுவதில்லை. ஒரு வேளை பவுல் இந்த மடலை எல்லா சபைகளுக்கும் பொதுவான சுற்று மடலாக எழுதியிருக்கலாம். எபேசு பட்டணத்தில் அவர் மூன்று ஆண்டுக் காலம் தங்கி ஊழியம் செய்ததாலும், எபேசு பட்டணத்துச் சபை அந்தப் பகுதியில் பிரபலமாயிருந்தபடியாலும் இந்த மடலில் பவுல் எபேசு சபையைத் தனிப்பட முறையில் குறிப்பிட்டிருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

இந்த மடலைப் பற்றி வேறொரு செய்தியும் உண்டு. இதை பவுல் தான் எழுதினார் என்று உறுதியாய்ச் சொல்ல முடியவில்லை என்பாரும் உண்டு. ஏனெனில் இந்த மடலில் காணப்படும் நடை மற்ற மடல்களின் நடைக்கு வேறுபட்டுள்ளது. ஒரு வேளை கருத்துக்களைச் சிந்திப்பவர் ஒருவரும், அக்கருத்துகளை எழுத்தில் வடிப்பவர் வேறொருவருமாக இருத்தல் அக்காலத்தில் இருந்த வழக்கமாகும். (ரோமர் 16;22) அப்பழக்கத்தின்படி பவுல் கிறிஸ்தவர்களுக்குத் தெரிவிக்க விரும்பிய கருத்துக்களை ஓர் எழுத்தாளரிடம் சொல்லியிருக்கலாம். அந்த எழுத்தாளர் அவற்றைத் தமக்குரிய நடையில் எழுதியிருக்கலாம்,

எபேசு நகரில் பிலேமோன் என்று ஒரு செல்வந்தர் இருந்தார். அவருக்கு எழுதிய சிறு குறிப்புத்தான் பிலேமோனுக்கு எழுதிய நிருபம். பிலேமோனின் அடிமைகளில் ஒருவனாகிய ஒநேசிமு என்னும் இளைஞன் ஓடிவிட்டான் அச்சமயம் ரோமர்புரியில் தங்கி இருந்த பவுலும் அப்போஸ்தலன் அவனை தற்செயலாய்ச் சந்தித்து சுவிசேஷத்தைச்சொல்லி கிறிஸ்தவனாக்கினார். அவன் இப்பொழுது புதிய சிருஷ்டியாகவும் கிறிஸ்துவுக்குள் சகோதரனுமாக இருக்கிறபடியால், அதனை மீண்டும் பிலேமோன் இடமே அனுப்பி, அவனை மன்னித்து ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறார், உள்ளத்தை உருக்கும் உணர்ச்சி கொண்ட மடல், கிறிஸ்துவுக்குள் அடிமையென்றும் சுயாதீனன் என்றும் இல்லை என்பதைப் பற்றச்சாற்றும் உயரிய கருத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஊழியர்களுக்கு எழுதிய நிருபங்கள்: இவை சுவிசேஷர்களாகப் பணியாற்றிய தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும், எழுதப் பெற்ற மடல்கள், தீமோத்தேயு, பவுலடிகளாரின் உண்மைத் தொண்டர்களில் முக்கியமானவர் அப் 16:1, 2 19:22: ரோமர் 16:21. இவர் அடக்கமுள்ள இளைஞர் (1தீமோத் 4:12) ஆனால் தாராளமனமும் திறமை பலவும் கொண்டவர் அதே போல தீத்துவும் நற்சாட்சி பெற்றவர். (2 கொரி 7:6-16) இவரை கிரேத்தே தீவில் இருந்த சபையை ஒழுங்குபடுத்துவதற்காக அவ்விடம் விட்டு வைத்தார் ;தீத்து 1:5)

தீமோத்தேயுவுக்கு எழுதின முதல் மடலும், தீத்துவுக்கு எழுதிய மடலும். சுமார் கி. பி. 65ல். மக்கதொனியாவிலிருந்த போது எழுதப் பட்டிருக்கலாம் என்றும் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம் புவுலடியார் தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தில், ஒருவேளை கொலை யுண்ணப்படுவதற்கு ரோமாபுரியில் சிறையில் காத்திருந்த பொழுது எழுதப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

இந்த மூன்று மடல்களும் திருச்சபையை எவ்வாறு முறைப்படுத்த வேண்டும். மக்களை எவ்வாறு வழி நடத்த வேண்டும் என்பது பற்றி ப்வுல் பரிசுத்த ஆவியானவரின் அருளால் கூறிய ஆலோசனைகளாகும்.

எபிரேயருக்கு எழுதிய நிருபம்: இம் மடல், ஒரு மடல் தானு என்ற கேள்வி எழுகின்றது. மற்ற மடல்களில் உள்ளது போல் இதில் தொடக்க வாழ்த்து இல்லை. இறையியல் உண்மைகளை விளக்கும் ஒரு நூல் போல் உள்ளது. அடுத்து, இதில் கூறப்படும் எபிரேயர் யார் என்று தெளிவாகத் தெரியவில்லை. எருசலேமை விட்டு நாடு கடத்தப்பட்ட யூதேயாக் கிறிஸ்தவர்களாகத் தான் இருத்தல் வேண்டும். ஆனால் அவர்கள் எங்கு வாழ்ந்தவர்கள் என்று கூற முடியவில்லை. மேலும் இது அப்போஸ்தலன் பவுல் எழுதின நிருபந்தானு என்ற ஐயப்பாடு உண்டு. அவருடைய நடையும் சொல் தொகுதியும். இதில் இல்லை அவர் வழக்கமாகக் கூறும் கொள்கையும்; சொல்ல வந்த கொள்கையை விளக்கும் முறையும் இதில் இல்லை. இதன் கருப்பொருள் கிறிஸ்துவின் குருத்துவம் ஆகும். ஒரு வேளை இவருடைய கூட்டாளிகளில் ஒருவரான அப்பொல்லோ என்பவர் இதை எழுதியிருக்கலாம் என்று கருத இடமுண்டு. அவரோடு நெருங்கிப் பழகியிருப்பதால் புவுலடியாரின் சிந்தனை ஓட்டத்தை நன்கு அவர் அறிந்திருந்தார். அதோடு தனக்கிருந்த பழைய ஏற்பாட்டு ஞானத்தைப் (அப் 18;24-28) பயன்படுத்தி கிறிஸ்துவின் குருத்துவ மேன்மை, கிறிஸ்துவின் பணி, பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் ஆகியவைகளைப் பற்றி தெளிவானமுறையில் விவரித் திருப்பார் என்று தோன்றுகிறது.

## சகோதர ஒற்றுமையின் மேன்மை.

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது!

அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்கு கிறதுமான நல்ல தைலத்துக்கும்.

எர்மோன் மேலும்,சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது. அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறுர்.

# இயேசுகிறிஸ்து ஸ்தாபித்த சபை

இன்று சபைகள் என்ற பெயரால் இயங்கும் குழுமங்களையும் ஸ்தாபனங்களையும் இயேசு கிறிஸ்து ஸ்தாபித்தரா? அல்லது அவருடைய அங்கீகாரமாவது இருக்கிறதா? வேதாகமம் கூறுவது முற்றிலும் சத்தியம் என்று விசுவாசித்து கவனமாகப் படித்துப் பார்த்தால் அப்படியில்லை என்பதை அறியமுடியும். இயேசு கிறிஸ்து கட்டியது ஒரே சபை தான். சபைகள் என்ற பெயரால் பல்வேறு கால கட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட பல நிறுவனங்கள் உருவாவதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே அந்த ஒரே சபை இயங்கி வந்தது. அந்தச் சபையில் அப்போஸ்தலர்கள் பேதுரு, யோவான், பவுல் போன்றவர்களும் முதல் நூற்றுண்டில் வாழ்ந்த கிறிஸ்துவின் சீடர்களும் அங்கம்வகித்தார்கள். இந்த ஒரே சரீரம் (எபே 4:4) என்கிற அந்த ஒரேசபைக்கு (எபே 1:22) கிறிஸ்து தாமே தலைவரும், ஆளுநரும். (கோலா 1:18; எபே 5:23) அந்த ஒரே சபை மூலம்தான் இரட்சிப்புப்பெற இயலும். எபே3:10-21 அப்படியானால் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சபைகளின் கதி என்ன? பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோட பிடுங்கப்படும் என்று இயேசு தாமே சொல்லியிருக்கிறார் (மத் 15:13)

இன்றைக்கு சுமார் ஐந்நூறுக்கும் அதிகமான குழுமங்களும், நிறுவனங்களும் தாங்கள் தான் உண்மையான சபை என்று கூறிக்கொண்டு உலக மக்களை நம்ப வைத்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களுடைய அதிகார பலம், பண பலம், ஆள் பலம் அதற்குத் துணை நிற்கின்றன. ஆனால் அவைகளை வேதாகமத்தின் வெளிச்சத்தில் பார்த்தால் அவைகள் போலிகள் என்பது தெரியவரும். ஏனெனில் உண்மையான சபைக்கு இருக்க வேண்டிய அடையாளங்களும், தகுதிகளும் அவைகளுக்குக் கிடையா; இப்படிச் சொல்வது யாரையும் புண்படுத்துவதற்காக அல்ல, கீழ்வரும் காரியங்களை நீங்கள் தயவு கூர்ந்து நிதானித்து நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்.

(1) உண்மையான சபையில் இருப்பவர்கள் பாவப்பிடியிலிருந்து வெளியே வரும்படி அழைக்கப்பட்டு சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்தவர்கள் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். கொலோ 1:12-14.

(2) அந்த ஒரு சபை இயேசு கிறிஸ்துவினால் 'கட்டுவேன்' என்று வாக்குறுதி கொடுக்கப்பட்ட சபை (ஒருமையில் சொல்லப்பட்டுள்ளதை கவனிக்க) அவரே அதற்கு மூலைக்கல்; அவரே அதன் தலைவர்; தம்முடைய விலைமதியாத இரத்தத்தை விலையாகக் கொடுத்து அதை சம்பாதித்தார். 1 கொரி 3:11, 12, அப் 20:28; கொலோ 1:18.

(3) அந்த ஒரே சபை ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஸ்தாபிக்கப்படும் என்று வேத வாக்கியங்கள் சொன்னபடி ஸ்தாபிக்கப்பட்டது. அது எருசலேம் பட்டணம். (ஏசையா 2:2, 3, அப் 2-ஆம் அதிகாரம்)

(4) கிறிஸ்துவின் சபை கடைசி காலத்தில் ஸ்தாபிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது (ஏசாயா 2:2). அப்படியே கடைசி காலத்தின் ஆரம்ப நாட்களாகிய கி. பி. 33-ஆம் ஆண்டு பெந்தேகோஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்டது.

(5) அந்த ஒரே சபையில் சேருவதற்குரிய தகுதிகள் உண்டு. முதலாவது சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசிக்க வேண்டும். ரோமர் 10:17. பாவத்திலிருந்து மனம் திரும்ப வேண்டும் லூக். 13:3 இயேசுவைக் கிறிஸ்துவென்றும் கர்த்தரென்றும் அறிக்கை செய்யவேண்டும். ரோமர் 10:9, 10. பாவ மன்னிப்புக்காக கிறிஸ்துவின் பெயரால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் அப் 2:38. அதன்பிறகு மரணபரியந்தம் உண்மையும் உத்தமுமாய் நிலைத்து நிற்க வேண்டும். (வெளி 2:10). அந்த ஒரே சபையில் யூதர்கள், புறஜாதிகள் என்ற வித்தியாசமில்லாமல் ஒரே புதிய சிருஷ்டியாக மாற்றப்படுகிறார்கள். எபே 2:15.

நண்பர்களே! நீங்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட விரும்பினால் தயவுசெய்து நீங்கள் மேற்கண்ட காரியங்களின்படி நடந்திருக்கிறீர்களா என்று சிந்தித்துப் பாருங்கள். அப்படி யில்லையென்றால் உங்கள் நிலையைச் சரிசெய்து கொள்ளுங்கள்.

(6) கிறிஸ்துவினால் கட்டப்பட்ட சபை ஒரு சிறந்த ஒழுங்குடன் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருந்தனர் அப் 14:23; தீத்து 1:5. இந்தப் பதவிக்கு தேவனால் நியமிக்கப்பட்ட சில சிறப்புத் தகுதிகள் உண்டு 1 தீமோ 3:1-7 அதுமாத்திரமல்ல, சபையில் உதவிக்காரர்களும் இருந்தனர் அப் 6:2, 4 அவர்களுக்கும் சில சிறப்புத் தகுதிகள் உண்டு. 1 தீமோ 3:7-13; அது அல்லாமல் சுவிசேஷர்களும் இருந்தனர் அப் 21:8, எபே 4:13; 2 தீமோ 4-5 இவைகளால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில்; ஒரு முழுமையான வளர்ச்சி பெற்ற சபை ஒவ்வொன்றுக்கும் மூப்பர்கள், உதவிக்காரர்கள், சுவிசேஷர்கள் ஆகியோர் இருக்க வேண்டும்; அப்படி ஆதிச் சபைகளில் இருந்தது பிலி. 1:1. ஆனால் இன்று நாம் காண்பது என்ன? பல சபைகளுக்கு ஒரு மூப்பர் (Bishop) இப்படி எத்தனை எத்தனையோ வேதம் அங்கிகரிக்காத பதவிகள், பட்டங்கள்.

(7) இயேசு கிறிஸ்து கட்டின ஒரே சபைக்கு பல்வேறு தரப்பட்ட மக்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்; அப்படி இருந்தார்கள் 1 கொரி 12:13-31.

(8) இயேசு கட்டின ஒரே சபையில் விசுவாசிகள் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும், யோவான் 4:24. அவர்கள் வேதாகமம் அங்கிகரித்த காரியங்களை மட்டுமே ஆராதனையில்

கடைப்பிடித்தார்கள், யோவான் 17:17 அவர்கள் தங்கள் ஆராதனையில் செய்யப்பட வேண்டிய காரியங்களுக்கு பழைய ஏற்பாட்டை ஆதாரமாகக் கொள்ளவில்லை ஏனெனில் பழைய ஏற்பாடு நமக்குப் போதனையாக இருக்கிறதே அல்லாமல் பின்பற்றுவதற்காக அல்ல (ரோமர் 15:4) என்பதை அறிந்திருந்தார்கள். நாம் பழைய ஏற்பாட்டிலுள்ள சில காரியங்களைப் பின்பற்றி தசமபாகம் குருத்துவ முறை, இசைக் கருவிகள் என்று எத்தனையோ காரியங்களைச் சேர்த்துக் கொள்ளுகிறோம். அவைகளைப் பற்றிப் புதிய ஏற்பாட்டு ஆராதனை முறை ஒன்றும் சொல்வதில்லை.

இப்படி எத்தனையோ காரியங்களைச் சுட்டிக் காட்டலாம். அதை விட்டு நீங்களே உங்கள் வேதாகமத்தை ஜெபத்துடன் வாசித்துப் பார்த்து தெளிவடையுங்கள். தேவன் தாமே அவரால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேத வாக்கியத்தை மதித்து நடக்க உதவி செய்வாராக!

— J. J. டர்னர்

(28-ஆம் பக்கத் தொடர்ச்சி)

5. முதலில் நம்மை நாமே கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்கப் பழகிக் கொள்வதே உதாரத்துவமாகக் கொடுப்பதற்குத் திறவுகோல், 2 கொரி 8:5

5, ஒரு கிறிஸ்தவன் அன்பினால் ஏவப்படுவதால் கொடுக்க வேண்டும் 2 கொரி 8:11, 12

7. கொடுப்பது விதைப்பதற்குச் சமானம், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்! பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். 2 கொரி 9:6

8, ஒரு கிறிஸ்தவன் காணிக்கைத் தட்டு தன்னிடத்திற்கு வந்த பிறகோ அல்லது காணிக்கை கொடுக்கிற தருணம் வந்த பிறகோ ஜோப்பைத் தேடிக் கொண்டிருக்கக் கூடாது, ஏற்கனவே என்ன கொடுக்க வேண்டும் என்பதை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். 2 கொரி 9:7

9. கிறிஸ்தவன் விசனமாயுமல்ல! கட்டாயமாயுமல்ல, உற்சாக மனதோடு கொடுக்க வேண்டும். 2 கொரி 9:7

10. வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே ஆசீர்வாதம் அப் 20;35

D. சாமுவேல் ராஜ்

# ஈகைப் பெருங்குணம்.

தேவனுடைய கட்டளைகளில் பெரும்பாலோருக்குக் கசப்பு மாத்திரையாக இருப்பது " வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் "என்ற சொற்றொடர்தான் (அப் 20-35) என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். ஏனெனில் இது நம்முடைய மணிப்பர்ஸைத் தொடுகிற விஷயம் ஆனல் கிறிஸ்தவத்தை ஒருவன் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறான் என்று அறிந்து கொள்வ-தற்கு இது மிகச் சிறந்த அளவு கோல் ஆகும்.

இதனால் கிடைக்கும் ஆசீர்வாதங்களின் மேன்மையை அறிந்தவர்கள் பெரும் நன்மைகளை அடைந்து வாழ்க்கையில் உயர்ந்திருக்கிறார்கள். அதன் காரணமாகத் தான் கர்த்தரும் இதை மிகவும் வற்புறுத்துகிறார். பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் கர்த்தருக்குக் கொடுப்பதற்கான அளவு "தசம பாகம் என்று எண்ணிக் கொண்டு இருக்கின்றனர். இது யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரமாணம் கிறிஸ்தவர்களை இது கட்டுப்படுத்துவதில்லை. அதற்கு அர்த்தம் நாம் அதைவிடக் குறைவாகக் கொடுக்கலாம் அல்லது கொடுக்கவே வேண்டியதில்லை என்று பொருள் அல்ல. மத் 5;20 ல் கர்த்தர்" வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிரா விட்டால் பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன், என்கிறார். அதாவது அவர்கள் தசமபாகம் கொடுத்தார்கள். என்றால் நீங்கள் நிச்சயமாக அதை விட அதிகம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார். முந்தையவர்கள் கட்டாயத்தினால் கொடுத்தார்கள். ஆனல் நாமோ உற்சாக மனதுடன் கொடுக்க வேண்டும். கொடுப்பதைப் பற்றி புதிய ஏற்பாடு கூறுகிற காரிங்களை கவனித்து அதற்கிசைவாக நம்முடைய சிந்தனைகளை ஒழுங்கு படுத்திக் கொள்வோம்,

1. கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் கொடுக்க வேண்டும் 1 கொரி 10;2
2. இது ஒவ்வொருவருடைய கடமை "உங்களில் அவனவன்" 1 கொரி 16:26
3. தேவன் நமக்குக் கொடுத்த வரவுக்கேற்றபடி, 1 கொரி 16:2
4. நான் ஏழை,அது தேவனுக்குத் தெரியும். ஆகவே நான் கொடுக்க வேண்டியதில்லை என்று சொல்லாதே, 2, கொரி 1—4

வசனங்களை' வாசித்து' சிந்தியுங்கள்.

(இதன் தொடர்ச்சி 27-ஆம் பக்கம் பார்க்க)

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-7 : 45 to 8 : 00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker : Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9 : 00 to 9 : 15 P. M.
Thursdays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-9 : 00 to 9 : 15 P. M.
Sundays-12 : 45 to 1 : 00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2 : 30 to 2 : 45 P. M.
Tuesdays-2 : 30 to 2 ; 45 P. M.
Thursdays–2 : 30 to 2 : 45 P. M
Fridays-2 : 30 to 2 : 45 P. M.
Saturdays-2 : 30 to 2 : 45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker : P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5 : 30 to 5 : 45 P. M.
Thursdays-6 : 45 to 7 : 00 P. M.
Sundays-6 : 45 to 7 : 00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker : P. K. Varghese
All coresspondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdays,3 : 45 to 4 : 00 P. M.
Fridays-3 : 45 to 4 : 00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

# வாசக அன்பர்களே!

உங்கள் உற்சாகமூட்டும் கடிதங்களுக்காகவும் இதழின் மேம்பாட்டு யோசனைகளுக்காகவும் மிக்க நன்றி,

இதழில் வரும் கட்டுரைகளை கைப்பிரதிகளாக (Tracts) யார்வேண்டுமானாலும் அச்சிட்டு மற்றவர்களுக்கு விநியோகிக்கலாம். அதற்கு எங்களுடைய அனுமதி தேவை இல்லை. சத்தியம் எல்லா இடங்களிலும் பரவவேண்டுமென்பதே எங்கள் விருப்பம்.

ஆசிரியர், அழைத்தால் நற்செய்தி கூட்டங்களில் செய்தி கொடுக்க வருவார். ஆனால் கூட்டங்கள் 20-ஆம் தேதிக்குமேல் 10-ஆம் தேதிக்குள் ஒழுங்கு செய்யப்படவேண்டும்.

ஆசிரியர்

Published by Church of chirst and Printed by Sri. VelaE.V.Rajamanickam, at Vela Printers, Erode-638 001. Phone: 74878
Editor: E. Z. Selvanayagam

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to;
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.